கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு.E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2026-ம் ஆண்டு ஜூன் 05ம் நாள், வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்.317/2008
CNR No.TNMD130001842008
* * * **

பழனியாண்டி ... வாதி

/ எதிரிடை /

1) ராஜூ தேவர் (இறப்பு)
2) சக்கையாதேவர்
3) பாலு என்ற பாலசுப்ரமணியம்
4) அக்கம்மாள்
5) ராஜலெட்சுமி
6) சாந்தி
7) சந்திரா ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 01.06.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 2, 7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P. சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1ம் பிரதிவாதி

இறந்துவிட்ட நிலையில், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வழக்குரை, எதிர்வழக்குரை, எழுத்துப்பூர்வ வாதுரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

தாவா சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரியும், அதை தொடர்ந்து தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை இந்த நிர் பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும், வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. வழக்குரையின் சுருக்கம்:–

1.1) தாவாச் சொத்து வாதியின் தாத்தா கருப்பையாவுக்கு பாத்தியப்பட்ட ஒன்று என்றும், அவரது பெயரில் பட்டாவும் ஏற்பட்டுள்ளது என்றும், கருப்பையாவின் இறப்பிற்குப்பின்பு அவரது இரண்டு மகன்களும் தாவா சொத்தை எவ்வித பிரிவினையுமின்றி

அனுபவம் செய்து வந்தார்கள் என்றும், தாங்கள் அனுபவம் செய்து வந்த சமயத்தில் முத்தையா தேவரின் வரிசுகளான வரதம்மாள், பாண்டி மற்றும் முருகன் ஆகியோர்கள் தங்களது பங்கினை ரூ.27,000/– பெற்றுக்கொண்டு வாக்கரால் குடும்ப ஏற்பாட்டின்படி வாதிக்கு வாய்மொழியாக விடுதலை கொடுத்து உள்ளனர் என்றும், அதனடிப்படையில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும்,

1.2) பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், இந்த பிரதிவாதிகள் தாவா சொத்தை வாதியிடமிருந்து குறைந்த விலைக்கு கிரையம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், இவ்வாறு இருக்கையில் இந்த பிரதிவாதிகள் 24.06.2008ம் தேதி சில அடியாட்களுடன் தாவா சொத்தில் அத்துமீறி உள்ளே நுழைய முயற்சிகள் செய்தனர் என்றும், ஊர்ப்பெரியவர்கள் தலையீட்டால் மேற்படியார்களின் சட்ட விரோத செயல்கள் தடுத்து நிறுத்தப்பட்டது என்றும், எனினும் பிரதிவாதிகளின் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணம் இருப்பதால் வாதி அவர்களுக்கு எதிராக விளம்புகை பரிகாரமும் அதைத்தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாவா வழக்கினை தாக்கல் செய்ததாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>2) 2, 7 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>**

2.1) வாதி தரப்பு வழக்குப்படி தாவா சொத்துக்கள் வாதியின் தாத்தா கருப்பையா பெயரில் உள்ளது என்றும், தாவா சொத்துகளின் வருவாய் ஆவணங்களில் தவறுதலாக ஏற்பட்டுள்ள குறிப்புகளை தனக்கு சாதகமாக பயன்படுத்தி வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அசல் வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி தாக்கல் செய்துள்ள கணினி சிட்டாவில் கருப்பையா தந்தை சன்னாசி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் மேற்படி கருப்பையாவின் தகப்பனார் பெயர் மூக்கத்தேவர் என்றும், வாதி தவறான ஆவணத்தை அடிப்படையாக கொண்டு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி அடிப்படை ஆதாரமின்றியும், அவசிய தரப்பினர்களை சேர்க்காததாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும்,

2.2) எனவே, தாவா சொத்துக்களில் வாதிக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றும், மேலும் தாவா சொத்துக்களில் வாதி ஒரு போதும் சுவாதீனத்திலோ அனுபோகத்திலோ இருந்தது இல்லை என்றும், மேற்படி அழகம்மாள் வாரிசுகளையும், சந்திராவையும் கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத தோசத்தினால் பாதிப்பு அடைந்துள்ளது என்றும், வாதியின்

வழக்கை பிரதிவாதிகள் தரப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**3. எழுவினாக்கள்**:-

இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் இந்த நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ளன.

1. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதா?
2. வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
3. வழக்கு சொத்தின் அனுபவத்திலும், சுவாதினத்திலும் வாதி உள்ளாரா?
4. வாதி கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கககூடியதா?
5. இதர பரிகாரம் என்ன?

**4) சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : -

4.1) வாதி தரப்பில், வா.சா.1, வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வா.சா.1 மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) பிரதிவாதிகள் தரப்பில், பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.1 மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**எழுவினாக்களுக்கான தீர்வு:-**

**5) எழுவினாக்கள் எண்-1, 2 ற்கான தீர்வு:-**

1. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதா?
2. வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

5.1) வழக்கு சொத்து வாதிக்கு வாதியின் தாத்தா கருப்பையாவுக்கு பாத்தியப்பட்டு, அவரது காலத்திற்கு பின்னர் அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டு அனுபவத்தில் இருந்து வந்தது என்றும், இந்நிலையில் மேற்படி கருப்பையாவின் மற்ற வாரிசுகளிடமிருந்து வாதி ரூ.27,400/- ஐ ரொக்கமாக கொடுத்து வாய்மொழியாக பாக விடுதலை வழக்கு சொத்தை பொறுத்து வாதி குடும்ப ஏற்பாட்டின்படி பெற்றுள்ளார் என்றும், அதன்படி வழக்கு சொத்து முழுவதும் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும் என்றும் வாதி தரப்பில் வாதிடப்பட்டது.

5.2) இந்நிலையில், பட்டா பெயர் மாற்ற வருவாய்துறையினரை வாதி அணுகிய போது வழக்குச்சொத்து பிரதிவாதிகளுக்கு

பாத்தியப்பட்டது என்று தவறாக தெரிவித்தனர் என்றும், வழக்கு சொத்துக்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், எனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக வாதி தரப்பில் வாதிடப்பட்டது. இவ்வழக்கானது வழக்கு சொத்தை பொறுத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.3) இந்நிலையில், வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்றும், வாதிக்கும், வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பட்டாவில் சன்னாசி மகன் கருப்பையா என்று காணப்பட்டுள்ளது. ஆனால் வாதியின் மூதாதையர் கருப்பையாவின் தந்தை பெயர் மூக்கத்தேவர் என்று வாதியே தனது குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில் வா.சா.ஆ.1 பட்டா மூலம் வாதி எவ்வித பரிகாரமும் கோர இயலாது. வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் வாதிடப்பட்டது.

5.4) வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்ற வாதி கூறும் கூற்றை வாதியே நிரூபணம் செய்ய இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் கீழ் கடமைப்பட்டவர் ஆவார். இந்நிலையில் வழக்கு சொத்து வாதிக்கு

பாத்தியப்பட்டது என்று வா.சா.1, வா.சா.2 சாட்சியமளித்த போதும், அதை நிரூபணம் செய்யும்விதமாக வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்த போதும், வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய சட்டப்படியான ஆவணங்களாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் காணப்படவில்லை.

5.5) வழக்கு சொத்து வாதியின் தாத்தா கருப்பையாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டு வா.சா.ஆ.1 தாக்கல் செய்த போதும், மேற்படி வாதியின் தாத்தாவின் தந்தை பெயர் மூக்கத்தேவர் என்று வாதி சாட்சியமளித்துள்ள நிலையில், வா.சா.ஆ.1ல் சன்னாசி மகன் கருப்பையா என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படியானதாகவோ, மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் வாதிக்கு சட்டப்படியான பரிகாரம் எதுவும் கிடைக்கக்கூடியதாகவோ இல்லை.

5.6) இந்நிலையில், வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாக நிரூபணம் செய்யும்விதமாக வாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாக வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டதாக ஏற்க இயலாது. எனவே வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாக

நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. அதன்படி வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், வாதி கோரும் வழக்கு சொத்தை பொறுத்த விளம்புகை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினாக்கள்– 1, 2 க்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**6) எழுவினாக்கள் எண்–3, 4 ற்கான தீர்வு**:–

3. வழக்கு சொத்தின் அனுபவத்திலும், சுவாதினத்திலும் வாதி உள்ளாரா?
4. வாதி கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியதா?

வழக்கு சொத்தின் அனுபவத்தில் வாதி இருந்து வருகிறார் என்பதை நிரூபணம் செய்யும்விதமாக வாதி தரப்பில் எவ்விதமான சட்டப்படியான சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில், வழக்கு சொத்தின் அனுபவத்தில் வாதி உள்ளார் என்று வாதி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், வழக்கு சொத்தின் அனுபவத்திலும், சுவாதினத்திலும் வாதி இல்லை என்று இந்நீதிமன்றம்

தீர்மானித்துள்ள நிலையில், வாதி கோரியுள்ள நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினாக்கள்–3, 4ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**7) எழுவினா எண்–5 ற்கான தீர்வு:–**

5. இதர பரிகாரம் என்ன?

வாதிக்கு கிடைக்ககூடிய வேறு பரிகாரங்கள் என்ன என்று பரிசீலனை செய்கையில், தாவாச்சொத்தினை பொறுத்து வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி வாதிக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா எண்–5ற்கு விடை காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 05.06.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.05 11:42:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:–**

1. **வாதி தரப்பு சாட்சிகள்** :–

வா.சா.1 – பழனியாண்டி (வாதி)
வா.சா.2 – முருகன்

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள்: –**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 10.01.2008ம் தேதியிட்ட கருப்பையா பெயரிலான கணினி பட்டா. |
| வா.சா.ஆ.2. | 13.06.2008ம் தேதி வாதி சார்பில் திருமங்கலம் வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு. |
| வா.சா.ஆ.3. | 24.04.2008ம் தேதியிட்ட ஜமாபந்தி மனுவிற்கான ஒப்புதல் அட்டை. |

3. **பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:**

பி.வா.சா.1 – சக்கையா தேவர் ( 2ம் பிரதிவாதி)

**4. பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | |
|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 31.05.1934ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.2 | கிஸ்தி இரசீதுகள் அசல். (எண்ணம் 5) |
| பி.வா.சா.ஆ.3 | 10(1) சிட்டா கணினி நகல். |
| பி.வா.சா.ஆ.4 | 30.07.2008ம் தேதியிட்ட இறப்புச் சான்றிதழ் சான்றிட்ட நகல். |

**5. நீதிமன்ற சாட்சிகள்:** இல்லை.

**6. நீதிமன்ற சான்றாவணங்கள் :** இல்லை.

**7. சாட்சிய சான்றாவணங்கள் :** இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.05 11:42:34 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.317/2008
செவ்வை – தீர்ப்புரை
நாள்: 05.06.2026